Student/Registration Number | | | | | | | | | | |    Centre Number | | | | | | |

**2021** PUBLIC EXAMINATION

# Tamil

## Continuers Level

**Tuesday 19 October: 2 pm Australian Eastern Daylight Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 30 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2021

**Part A** (Questions 1–3)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 1**

1. (a) How is a pair of trained parrots expected to keep potential thieves away? **3**

- ______________________________
- ______________________________
- ______________________________

(b) Why are these parrots easy pets to own? **2**

- ______________________________
- ______________________________

**Marks** | You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 2**

2. (a) What are the mother's problems? **3**

- ______________________________

______________________________

- ______________________________

______________________________

- ______________________________

______________________________

(b) How can we infer that the academic progress of students is important to the school? **2**

- ______________________________

______________________________

- ______________________________

______________________________

Marks

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 3**

3. (a) According to the text, how will different groups of people benefit from doing *thoppukaranam*? **3**

- ________________________________________
- ________________________________________
- ________________________________________

(b) How could the government ultimately save money by investing in *thoppukaranam* platforms and free train tickets? **2**

- ________________________________________
- ________________________________________

## **Part B** (Questions 4–6)
(15 marks)

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks**

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 4**

4. Provide the advice given in the discussion between the man and the woman. **4**

இந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலில் வழங்கப்பெற்ற ஆலோசனையைத் தருக.

**Marks** | You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 5**

5. Explain the reasons why Mohamad still believes that the book is better than the movie and the play. **4**

   மொஹமட் இன்னமும் புத்தகந்தான் நாடகத்தையும் படத்தையும் விடச்சிறந்தது என்று நம்புவதற்கான காரணங்களை விளக்குக.

Marks | You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 6**

6. (a) Describe the mixed feelings and emotions that the uncle experiences and the reasons behind them, from the time he leaves his home until the end of the conversation. **4**

தனது வீட்டிலிருந்து பயணம் புறப்பட்ட நேரம் தொடக்கம் உரையாடல் நிறைவுற்றதுவரை மாமனார் அனுபவித்த பலதரப்பட்ட உணர்வுகளையும் மன எழுச்சிகளையும் அவற்றுக்கான காரணங்களையும் விபரிக்குக.

Marks | You may make notes in this space. These notes will NOT be assessed.

(b) Explain what the uncle is going to do when he reaches the graduation venue. **3**

பட்டமளிப்புவிழா நடைபெறுமிடத்துக்குச் சென்றதும், மாமனார் செய்யவிருப்பனவற்றை விளக்குக.

**End of Section 1**

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2021 Public Examination

# Tamil
## Continuers Level

## Section 2: Reading and Responding (25 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 10 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in black or blue pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2021

**Part A** (Questions 7–8)
(10 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts (for example, by comparing, contrasting, summarising and/or evaluating) and convey the information appropriately.*

---

7. Read the text and then answer in ENGLISH the question that follows.

ஓய்வுபெற்றுச்செல்லும் திரு திருமதி சிவசுப்பிரமணியம் அவர்களே இங்கு கூடியிருப்பவர்களே வணக்கம்.

என்ன இன்று இவன் தொடங்குகிறானே என்று எண்ணுகிறீர்கள். இப்பிரதேசத்தின் முன்னேற்றத்துக்காகவும் விவசாய விளக்கங்களுக்காகவும் எத்தனை தடவைகள் இந்தப் பிரயாணிகள் மேடையில் ஐயா தலைமையில் கூடியிருப்பீர்கள்? சொல்கிறேன்.

நாளை ஐயாகுடும்பம் எம்மைப்பிரிந்து பிறந்தஊர் செல்கிறது. சுருக்கமாக உங்களுக்குத் தெரிந்த தெரியாதவற்றை நினைவுபடுத்துகிறேன். 29 வருடங்களின்முன்பு எனது தாய்மொழியையே எனது வயதிற்குரிய தரத்தில் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில், தொடர்வண்டிநிலையக் காவலாளியான எனது தந்தையின் இடமாற்றங்காரணமாக, வசதிகள் மிகக்குறைந்த வேலையில்லாத் திண்டாட்டம் உச்சத்திலிருந்த இப்புகையிரதநிலையக் குடியிருப்பில் குடிபுகுந்தேன். அப்போது மூன்று பெட்டிகளுடன் வாரத்துக்கு ஆக இரண்டு பயணிகள்வண்டிகள்மட்டும் வந்துசென்றன.

எனக்கு எனது தாய்மொழியையும் பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாகத் தமிழ்மொழியையும் அப்போதைய 26 வயது இளைஞனான இவர், இக்குடியிருப்புப் பிள்ளைகளுடன் சேர்த்துத் தினமும் கற்பித்துவந்தார். அந்த நேரங்களில் இளம்மணமகளாக இருந்த அம்மையார், பாடசாலைசெல்லாத இளைஞர்களுக்கு ஆங்கிலத்தையும் தையல்நுணுக்கங்களையும் படிப்பித்துவந்தார். இவர்கள் இருவருமே எந்தப்பிரதிபலனும் எதிர்பார்க்கமாட்டார்கள்.

அன்பானவர்களே!

ஐந்து வருடங்களின்முன் நிலையஅதிபர் குடிமனை விருத்திக்காக ஐயாவுக்கு ஒதுக்கப்பெற்ற அரசுப்பணத்தில் பெரும்பகுதியை, பயணிகள் தங்குமிடவசதி செய்வதற்காக அரசின் சம்மதத்தைப்பெற்று இவர் செலவிட்டமையால், தொலைவிலிருந்து வரும்பிரயாணிகள் இரவில் தங்குவதற்கான பெருவசதி ஏற்பட்டுள்ளது.

நேற்று இந்தநிலையத்தின் நிலையஅதிபராக நான் நியமனம் பெறும்வரை இவர் ஓயவேயில்லை. தொடர்ந்து 15 வருடங்கள் எமது நிலையம் இந்தநாட்டின் மிகச்சிறந்த நிலையமாகத் தெரிவுசெய்யப்பெற்று வருகிறது. ஆக அவர்கள் சுத்தம், அழகு, நேரந்தவறாமை முதலான சிலவற்றைமாத்திரமே கருத்தில் கொள்கிறார்கள்.

இப்போது தினமும் வரும் மூன்று பயணிகள்வண்டிகளைவிட இப்பிரதேச உற்பத்திகளான மரக்கறி, பழங்கள் என்பவற்றுடன் தைக்கப்பெற்ற ஆடைகளையும் ஏற்றிச்செல்வதற்காகமட்டும் இரண்டு சரக்குவண்டிகள் தினமும் வந்துசெல்கின்றன. தரவையாக்கிடந்த இந்த நிலையக்காணியில் விளைகின்ற மரக்கறிவகைகள் மாத்திரம் தினமும் ஒரு தனிப்பெட்டியில் தலைநகருக்கு அனுப்பப்படுகின்றன. இன்று இவ்வூரில் மக்கள் எவரும் படிப்பிலோ அல்லது தொழிலிலோ ஈடுபடாமல் இல்லை. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டால் இந்தநாட்டின் மிகச்சிறந்த மனிதர் என்ற விருதே ஐயாவுக்கு வழங்கப்பெறவேண்டும்.

அன்பானவர்களே நாங்களும் தொடர்ந்து எங்களையும் இப்பிரதேசத்தையும் உயர்நிலையில் வைத்திருப்பதே ஐயாவுக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

வணக்கம்

QUESTION

**Marks**

Outline the developments in the narrator, the railway station and the community over time. **5**

8. Read the text and then answer in ENGLISH the question that follows.

6 டேவிட் வீதி
கிங்ஸ்டான்ட்
ஒஸ்ரேலியா
**09–09–2021**

அன்புத்தோழி மகாலட்சுமிக்கு,

உனது கடிதத்தை வாசித்து நீ உனது கல்லூரிப்படிப்பைத் தொடர முடியாமலிருப்பதை அறிந்து அதிர்ச்சியும் கவலையுமுற்றேன். என்ன பதில் எழுதுவதென்றே தெரியவில்லை. மூன்று வருடங்களின் முன்பு நந்தவனப்பள்ளியில் மும்மூர்த்திகள் என்று பட்டப்பெயர் சூட்டப்பெற்ற எமது இன்றைய நிலையை நினைக்க வியப்பாயிருக்கிறது. நீயும் நானும் இராசேஸ்வரியும் எமது பட்டப்படிப்பைப்பற்றி என்னகனவுகள் கண்டிருந்தோம்?

இராசேஸ்வரியினது தற்போதைய நிலையை அறிந்து ஆச்சரியமடைந்தேன். அவளது பெற்றோர்கள் தமது விவசாயத்திலிருந்து பெறுகின்ற குறைந்தளவு வருமானத்தைக்கொண்டு, சமூகத்தை எதிர்த்துநின்று, அவளைப் படிக்கவைக்க விரும்பினாலுங்கூட கல்லூரிச்செலவுக்கும் பணஞ்செலுத்தி, பின்னர் சட்டவிரோதமாகக் கேட்கப்படும் சீதனத்தையும் அவர்களால் கொடுக்கவியலாதுதானே? படித்தவளல்லவா என்று சீதனம் கேட்காமல் விடப்போகிறார்களா? சம்பிரதாயங்களைவிட உண்மையில் அவரவர் சூழ்நிலைதான் காரணமாயிருக்கிறதென்று நினைக்கின்றேன்.

எனது பெற்றோர்கள், எனது அம்மா வீட்டுப்பணிகளைச் செய்தால்சரி என்று ஒப்புக்கொண்டுதான் திருமணஞ்செய்தார்கள். இங்கே வந்து குடியேறியபின்னர் அவர்கள் வாங்கிய எமது வீட்டுக்குப்பெற்ற கடனையுங்கட்டிப் பிறசெலவுகளையும் சமாளிப்பதற்கு முடியாதநிலையில் இப்போது அம்மா ஒரு தொழிற்சாலையில் சிறியஊதியத்துக்கு வேலைசெய்துவருகிறார். அங்கே அவரும் அப்பாவைப்போலப் பட்டப் படிப்பைப் படித்துவிட்டு வந்திருப்பாரானால் அதிக சம்பளம் பெறுபவராக இருந்திருக்கலாம்.

நந்தவனக்கிராமத்தின் நிலை வேறு. பெண்ணின் திருமணவயது பதினெட்டு என்பது சட்டம் என்பதால்மட்டும் அதுவரை காத்திருக்கிறார்கள். அதனால்தான் இப்போதே உன்னைப் பெண் கேட்டு வருகிறார்கள். உனது பெற்றோர் நீ படிப்பதை விரும்பினாலுங்கூட வந்த சந்தர்ப்பத்தை நழுவவிட விரும்பவில்லை. உனக்குத் திருமணம் நிச்சயிக்கிறார்கள். நீயும் உனது பெற்றோருடன் ஒத்துப்போய்ப் படிப்பை நிறுத்தச் சம்மதிக்கவேண்டிய நிலை.

இங்கே எனது நிலை அப்படியல்ல. எனக்குப்பூரண சுதந்திரம் உண்டு. தாதிவேலைக்கு அதிக தேவையுள்ளதால் அதனையே தெரிவுசெய்யவுள்ளேன். நந்தவனக்கிராமத்திலிருந்து அண்மையில் இங்கு வந்த எனக்கு ஆங்கில அறிவுபோதாததால் தனியார் போதனைக்குச் செல்கிறேன். எனது பகுதிநேரவேலை ஊதியத்திலிருந்து பணஞ்செலுத்துகிறேன். பல்கலைக்கழகக் கல்விக்கான கடனை எனதுபெயரிற்பெற்று மார்ச்மாதத்திலிருந்து, தாதியாவதற்கான நான்கு வருடப் படிப்பைத் தொடங்கவுள்ளேன். உனக்குத் திருமண வாழ்த்துக்களைத் தெரிவிப்பதே இப்போது நான் செய்யவேண்டியது. நல்வாழ்த்துக்கள்! இராசேஸ்வரிக்கும் எனது அன்பைத் தெரிவிக்கவும்.

அன்புநிறைவான சிநேகிதி,

நந்தினி

QUESTION

**Marks**

Based on the experiences of the three friends, compare the opportunities and obstacles for women to get an education in Nanthavana versus Australia. **5**

Education in Nanthavana

Education in Australia

**Part B** (Question 9)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*
- *demonstrate an understanding of the stimulus text*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

9. Read the text and then answer the question in approximately 150 words in TAMIL on page 8.

கடந்தவாரம் இடம்பெற்ற ஒஸ்ரேலியத் தமிழர்கழகக்கூட்டத்தில் தமிழ்நாட்டிலிருந்து வந்த திரு கிருஸ்ணமூர்த்தி அவர்களால் நிகழ்த்தப்பெற்ற உரையின் சில பகுதிகளை இங்கே காண்கிறீர்கள்.

தமிழின் பெருமைகளும், தூய்மையும், பயன்பாடும் விரைவாக அழிந்துபோகின்றன. தமிழ்மொழியிலுள்ளனவும் பல நூறு வருடங்களுக்குமுன் பனையோலையில் எழுதப்பெற்றுள்ளனவுமான பலவிடயங்கள் இன்றும் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள சில வீடுகளில் ஏடுகளாக உறங்கிக்கிடக்கின்றன. அவற்றை வைத்திருப்பவர்கள் அவற்றின் அளவில்லாப்பெறுமதிகளை அறிவார்களா என்பது தெரியவில்லை. சித்தர்களிடமிருந்து கேட்டுப் பாடல்வடிவில் பரம்பரையாக கூறப்பெற்றுவந்த வைத்தியம், வானசாஸ்திரம் கணிதம் முதலான விடயங்கள் இவற்றிலுள்ளன. பல்வேறு காரணங்களால் இவற்றில் பல அழிந்துபோயின. வல்லுனர்கள் சிலர் அழிந்துபோன ஏடுகளுக்குப் பதிலாகத் தமது மனப்பாடத்திலிருந்தவற்றை மீண்டும் ஓலைகளில் எழுதிப்பாதுகாத்தனர்.

கல்வெட்டுக்களுக்கும் இதேகதிதான். வரலாற்று முக்கியத்தும்வாய்ந்த தமிழ்க்கல்வெட்டுக்கள் தென்னாசியா முழுவதிலும் ஆங்காங்கே குறிப்பாக இப்போது தமிழைப்பேசாத பிரதேசங்களில் முற்றாகவோ பகுதியாகவோ புதைந்துள்ளன. அரசுகளோ தனிப்பட்டவர்களோ எவருமே அக்கறை எடுப்பதாக இல்லை. சிலர் திட்டமிட்டோ அல்லது பெறுமதி தெரியாமலோ அவற்றை மூடிவிடுகிறார்கள். சிலர் கற்களின்தரத்தை மட்டும்கருத்தில்கொண்டு அவற்றைக் கட்டடங்கள் கட்டப் பயன்படுத்திவிடுகிறார்கள்.

இன்னொரு விடயம், ஏறக்குறைய நூறு வருடங்களுக்குமுன்பு ஆறுமுகநாவலர் அவர்கள், பெரும் வல்லமைபடைத்த புலவர்களால் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பெற்ற பல நூல்களை, முதன்முதலாக அச்சிட்டு வெளியிட்டிருந்தார். தானே பல புத்தகங்களை எழுதியும் பதிப்பித்திருந்தார். பெறுமதிமிகுந்த இந்நூல்கள் இப்போது மிகமிக அரிதாகவே கிடைக்கின்றன. பதிப்பித்து விற்றால் இலாபம் கிடையாதென்பதால் பதிப்பாளர் எவருமில்லாமல் அழிந்துபோகும் நிலையிலுள்ளன.

கவலைக்குரிய மற்றொரு விடயம், இன்று பல தமிழர்கள் அருமையான தமிழச் சொற்களுக்குப்பதிலாக வலிந்து ஆங்கிலச்சொற்களைத் தமது பேச்சிலும் எழுத்திலும் புகுத்திவருகிறார்கள். வானொலி, தொலைக்காட்சிகளும் இவற்றுக்கு விதிவிலக்கல்ல.

QUESTION

You are the leader of an Australian Tamil Youth Association and have read the speech extracts. Write an article that will be published on a Tamil language and culture website, explaining the significance of the treasures mentioned in the extracts and persuading Tamil youths worldwide to take urgent actions to protect them.

இந்த உரைப் பகுதிகளை வாசித்த ஒஸ்ரேலியத் தமிழ் இளைஞர் கழகமென்றின் தலைவரான நீர், மேற்கூறிய பொக்கிஷங்களின் முக்கியத்துவத்தை விளக்கி, அவற்றைப் பாதுகாக்க உலகத்தமிழ் இளைஞர்கள் உடனடி நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஊக்குவிக்க விரும்புகிறீர். அதற்கான ஒரு கட்டுரையைத் தமிழ்மொழி கலாச்சாரம் தொடர்பான இணையத்தளமொன்றில் வெளியிடுவதற்காக எழுதுக.

---

You may make notes in this space. These notes will NOT be assessed.

*Do not remove this page from the question booklet.*

| Student/Registration Number | | | | | | | | | | | | | Tamil Continuers Level |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

| Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

Question 9

**End of Section 2**

BLANK PAGE

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

**2021 PUBLIC EXAMINATION**

# Tamil

## Continuers Level

### Section 3: Writing in Tamil (20 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

*© Victorian Curriculum and Assessment Authority 2021*

**Section 3** (Questions 10–12)
(20 marks)

---

*Your response will be assessed on how well you:*
- *demonstrate depth of treatment of information, ideas and/or opinions*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

Answer ONE question from this section in approximately 250 words in TAMIL.

10. Many youths extensively use modern technologies for communication and other purposes. Based on your understanding, write an informative report for a Tamil newspaper about the effects resulting from excessive use of modern technologies.

    இளைஞர்கள் பலர் நவீன தொழில்நுட்பங்களைத் தமது தொடர்பாடலுக்கும் ஏனைய தேவைகளுக்கும் மிக அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். நீர் அறிந்த வகையில், நவீன தொழில்நுட்பங்களை அதிகம் உபயோகிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றிய தகவல்களை வழங்கி, தமிழ்ப் பத்திரிகையொன்றுக்கு ஒரு அறிக்கை எழுதுக.

11. You are studying in a neighbouring state and reside with your grandparents. Without your knowledge, your family is organising a big birthday celebration for you at a hall, with extensive preparations underway. You have somehow discovered this. Write an email to your parents, explaining how you would prefer that they spend that money on something different.

    நீர் அயல் மாநிலத்தில் உமது பாட்டனார் பாட்டியாருடன் வாழ்ந்து படித்துவருகிறீர். உமது பிறந்தநாளை, உமக்குத்தெரியாமல், விரிவான ஆயத்தங்கள் செய்து, ஒரு மண்டபத்தில் பெருவிழாவாக நடத்த உமது குடும்பத்தினர் ஏற்பாடு செய்கிறார்கள். இதை எவ்வாறோ அறிந்துவிட்ட நீர், அவர்கள் செலவிடவிருந்த பணத்தை எவ்வாறு வேறுவகையில் செலவிடலாம் என்று விரும்புகிறீர் என்பதை விளக்கி, உமதுபெற்றோர்களுக்கு ஒரு மின்னஞ்சல் எழுதுக.

12. You enjoyed your recent visit to a demonstration and exhibition of various traditional Tamil cooking methods, which took place in the city centre. Write an article for an Australian Tamil magazine, describing the experiences gained by many of those who attended and evaluating the quality of the event.

    அண்மையில் நகரத்தின் மையத்தில் நடைபெற்ற தமிழர்களின் பலவகையான பாரம்பரிய சமையற்செயன்முறைக் கண்காட்சி நிகழ்ச்சியொன்றை நீர் கண்டுகளித்திருந்தீர். அக்காட்சிக்கு வந்திருந்த பலரும் பெற்றிருந்த அனுபவங்களை விபரித்தும் நிகழ்ச்சியின் தரத்தை மதிப்பீடுசெய்தும் ஒஸ்ரேலியத் தமிழ்ச் சஞ்சிகையொன்றுக்கு ஒரு கட்டுரை எழுதுக.

You may make notes in this space. These notes will NOT be assessed.

Question Number:

PLEASE TURN OVER

**End of Section 3**